மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கோவில்பட்டி
அ.வ.எண்.212/2017.

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். – எத்திராஜ்
த/பெ. –
கிராமம் –
தொழில் –
தாலுகா –
வயது –

1875–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 06–ஆம் நாள் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>.–

1) நான் வாதியின் கணவர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை வாதிகள் தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1 | 14.09.2015 ல் தபசில் சொத்தை பொறுத்து வாதி பெயருக்கு சீனியம்மாள் மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | தபசில் சொத்திற்குரிய பட்டா எண்.852 க்குரிய வளையதள நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | பட்டா எண்.852 க்குரிய தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 22.03.2017 ல் வாதி சார்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடகன் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 17.04.2018 ம் தேதியில் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.176/2016 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வா.சா.ஆ.6.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7. | 24.01.2020 ம் தேதியிட்ட கணினிப்பட்டா மாறுதல் உத்தரவும் பட்டா நகலும் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8. | 01.01.2018 முதல் 06.08.2018 ம் தேதி வரையிலான தாவா சொத்துக்குரிய வில்லங்க சான்று வளையதள பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை –</u> வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
06.09.2022.